# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | 2.1 நோக்கு | 02 |
| | 2.2 அரும்பணி | 02 |
| 3. | தவிசாளரை உள்ளிட்ட பணிப்பாளர் சபை | 03 |
| 4. | பிரதான உத்தியோகத்தர்கள் | 04 |
| 5. | பதவியணி 2009 | 05 |
| 6. | தவிசாளரது மீளாய்வு | 06 |
| 7. | செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2009 | 07 |
| 8. | அதிகாரசபையின் நிதியம் | 11 |
| 9. | நிதி அறிக்கை | 12 |
| | 9.1. ஐந்தொகை | 12 |
| | 9.2. வரவு செலவுக் கணக்கு | 13 |
| 10. | கணக்காய்வு அறிக்கை | 15 |


பொருளடக்கம்



## 01. அறிமுகம்

### நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சட்டம் 2008 ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி முதல் அமுலாக்கப்படுவதோடு, அதிகாரசபையின் முதலாவது பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் அதிகாரசபையின் அலுவல்கள் 2009 பெப்ருவரி மாதத்தில் இருந்தே தொடங்கப்பட்டன.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்படுவதற்கான அடிப்படை நோக்கமாக அமைந்தது யாதெனில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையைத் தயாரித்தல், நிலைபேறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி உருவாகும் பொருட்டு வசதிகள் குறைந்த நகரக் குடியிருப்புகளில் வசிக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் அந்த மக்களுக்கு ஆகக் குறைந்த நகர்சார் வசதிகளுக்கான புகுமுகத்தை ஏற்படுத்தி தற்போது காணப்படுகின்ற வீடமைப்புக் கூறினை விருத்தி செய்தல் அல்லது மிகவும் சாதகமான வீடமைப்பு வசதிகளை வழங்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து அமுலாக்குவதுமே ஆகும்.



02

### 2:1 நோக்கு

“நிலைபேறான நகரக் குடியிருப்புக்களில் தரம்
மிக்க வாழ்க்கை
முறையினை உறுதிப்படுத்துதல்”

### 2:2 அரும்பணி

“நிறைவான நகர அபிவிருத்தித் திட்டத்துடன் அமைந்தொழுகி வசதிகள் குறைவான நகரக் குடியிருப்புக்களிலும் நகர்சார் வலயங்களிலும் வசிப்பவர்களின் வீடமைப்புச் சிக்கலுக்கான தீர்வினை வழங்குதலும் அதற்குச் சமாந்தரமாக அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுதலும்”



# 03. தவிசாளரை உள்ளிட்ட பணிப்பாளர் சபை

தவிசாளரை உள்ளிட்ட பணிப்பாளர் சபை

## 2009.01.15 முதல் 2009.12.31 வரையான பணிப்பாளர் சபை

| | பதவி | பெயர் | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 01. | தவிசாளர் | திரு பிரசன்ன குணவர்தன | 2009-01-15 |
| 02. | பணிப்பாளர் நாயகம் (பணிப்பாளர் சபை செயலாளர்) | திரு.ஜீ.ஜீ.கே. காமிணி | 2009-02-02 |
| 03. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர | 2009-02-18 |
| 04. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. திசா வீரபான | 2009-02-18 |
| 05. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | வித்யாஜோதி டபிள்யு.என். கெமுணு சில்வா | 2009-02-18 |
| 06. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. எம்.இஸெட்.மொஹொமட் நிசா | 2009-02-18 |
| 07. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திருமதி பத்ராணி ஜயவர்தன | 2009-02-18 |
| 08. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. எச்.பீ.சீ. ஹேரத் | 2009-02-18 |
| 09. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. எஸ்.எஸ். முதலிகே | 2009-02-18 |
| 10. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. பிரசன்ன சில்வா | 2009-02-18 |
| 11. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.டபிள்யு. தயானந்த | 2009-02-18 |





# 04. பிரதான உத்தியோகத்தர்கள்

## 2009.01.15 முதல் 2009.12.31 வரையான பணிப்பாளர் சபை

| பதவி | பெயர் | அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 01. பணிப்பாளர் நாயகம் | திரு. ஜீ.ஜீ.கே. காமிணி | 2009-02-02 |
| 02. பணிப்பாளர் (கருத்திட்ட முகாமை மற்றும் அபிவிருத்தி) | திரு. வை.ஆர்.த சில்வா | 2009-08-01 |
| 03. பிரதம உள்ளக கணக்காய்வாளர் | திரு. என்.ஜீ.பி. டயஸ் | 2009-10-01 |
| 04. சிரேட்ட பொறியியலாளர் | திரு. ஜி.ஜே. குணசேகர | 2009-10-01 |
| 05. கணக்காளர் | திரு. எஸ். சுமந்திரன் | 2009-05-07 |
| 06. சட்ட உத்தியோகத்தர் | திருமதி டீ.ஏ.தேவிகா திசாநாயக்க | 2009-11-01 |
| 07. அலுவலக முகாமையாளர் | திருமதி ஜே. ஸ்ரீவர்தன | 2009-01-26 |
| 08. வெளிக்கள இணைப்பாளர் | செல்வி பீ.எஸ். கமகே | 2009-01-26 |



## 05. பதவியணி 2009

பதவியணி 2009

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முதலாவது பதவியணியாக அமைவது அப்போதைய நகர அபிவிருத்தி மற்றும் புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிலவிய நகரக் குடியிருப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பதவியணியைச் சேர்ந்த 16 பேர் அவ்வமைச்சு செயலாளரது 2009.01.26 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைக்கப்பட்ட ஊழியர் குழுவாகுமென்பதோடு 2009.12.31 ஆம் திகதியன்று மொத்தப் பதவியணி 64 பேர்களாக அமைந்தது. இடைக்கிடையே அவசியப்பாட்டுக்கிணங்க ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

2009 ஆம் ஆண்டின் இறுதி வரையும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கென தனிவேறான பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிராததால் அனைத்து ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி உள்ளனர்.



# 06. தவிசாளரது மீளாய்வு

2008 இன் 36 ஆம் இலக்கமுடைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் மூலமாக ஸ்தாபிக்கப்பட்ட இவ்வதிகாரசபையின் அலுவல்கள் 2009 ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அதிகாரசபைக்கான முதலாவது தவிசாளர் நியமிக்கப்பட்டதும் தொடங்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டில் 03 அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வதிகாரசபை ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டன. முதலாவது நிகழ்ச்சித்திட்டம் நகர்சார் வறியோருக்கான வீடுகள் அருணோதய குசும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையின் நகர்சார் வலயங்களில் வீடொன்றை நிர்மாணித்துக்கொள்ள வசதியற்ற நலன்பெறுநர்களுக்காக வீட்டினை அமைத்துக்கொள்ள ரூ. 125,000.00 கொடையாக வழங்கப்பட்டதோடு, சமுதாய உழைப்புப் பங்களிப்பினைப் பிரயோகித்து வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டம் முன்னர் நகர அபிவிருத்தி மற்றும் புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சின் ''நகர குடியிருப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்'' கீழ் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாக அமைந்ததோடு, இந்த அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதும் இந்நிகழ்ச்சித் திட்டம் இவ்வதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் கீழ் 1000 வீடுகளை நிர்மாணித்தல் தொடங்கப்பட்டு அதற்காக 2009 ஆம் ஆண்டில் ரூ. 101.131 மில்லியன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

குடிசைகளற்ற நகரங்கள் நிகழ்ச்சித் திட்டமும் முன்னர் நகர அபிவிருத்தி மற்றும் புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிலவிய ''நகரக் குடியிருப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்'' மூலமாக அமுலாகியதோடு, இவ்வதிகாரசபை தாபிக்கப்பட்ட பின்னர் இந்நிகழ்ச்சித் திட்டமும் அமுலாக்கப்பட்டுள்ளது.
சமுதாயப் பங்கேற்பின் பேரில் நகர்சார் வலயங்களில் குடிசைகள் மற்றும் சேரிவாசிகளுக்காக வீடுகளை அமைத்துக் கொடுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் மொறட்டுவ ஜவன்வத்த வீடமைப்புக் கருத்திட்டம், பதுளை - பதுளுப்பிட்டிய. கயிலகொட, நீர்கொழும்பு - தலாதூவ மற்றும் அம்பாந்தோட்டை கோவிலவத்த எனும் வீடமைப்புக் கருத்திட்டங்கள் தொடங்கப்பட்டன. இதன் கீழ் வரிசை வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதோடு, ஒரு நலன்பெறுநர் வீட்டுக்காக ரூ. 175,000.00 கொடையாக ஒதுக்கப்பட்டதோடு, சமுதாய உழைப்புப் பங்களிப்பும் பெறப்பட்டது.

நகர்சார் வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டமும் 2009 இல் இவ்வதிகாரசபை மூலமாக அமுலாக்கப்பட்டதோடு, இதன் கீழ் நகர்சார் குடியிருப்புக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொடுத்தல் நோக்கமாக அமைந்தது.

மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ரூ. 134.6 மில்லியன் பணத்தொகை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்ததோடு, இதற்கான நிதியேற்பாடுகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செலவு குறைந்த வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணங்களாக சேகரிக்கப்பட்டிருந்த பணத்தில் இருந்தே வழங்கப்பட்டன.
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 16 வது பிரிவுக்கிணங்க இவ்வதிகாரசபைக்காக தனிவேறான நிதியமொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, தொடக்க முதலாக ரூ. 5000 மில்லியன் திரட்டு நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டியதாக இருப்பினும் 2009 ஆம் ஆண்டின் இறுதிவரை மேற்படி தொடக்க மூலதனத்தின் ஒரு பகுதியேனும் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை.

சட்டம் மூலமாக அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள நிதியமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையொன்று நிலவியதோடு, அதிகாரசபைக்காக பதவியணியொன்றையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இருந்தது. எவ்வாறாயினும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட ஏற்பாடுகள் மூலமாக 03 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்க முதலாவது ஆண்டிலேயே இவ்வதிகாரசபைக்கு இயலுமானமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தொடர்ந்தும் அதிகாரசபையின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட கூட்டாண்மைத் திட்டமொன்றைத் தயாரித்து அதிகாரசபை ஸ்தாபிக்கப்படுதலுடன் தொடர்புடைய நோக்கங்களை அடைவதற்காக நிறைவான செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததென்பதையும் கூறுகிறேன்.

சட்டத்தரணி பாலித கமகே
தவிசாளர்
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை



## 07. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2009

2009 ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால், கீழே குறிப்பிடப்பட்ட 03 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

1. நகர்சார் வறியோருக்கான வீடுகள் அருணோதய குசும் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்.
2. குடிசைகளற்ற நகரங்கள் நிகழ்ச்சித் திட்டம்.
3. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம்.

### 1. நகர்சார் வறியோருக்கான வீடுகள் அருணோதய குசும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்.

நகர்சார் மற்றும் பகுதியளவில் நகர்சார் பிரதேசங்களில் வசிக்கின்ற, வீடொன்றை அமைத்துக் கொள்ள வசதியற்ற வறிய சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு அமுலாக்கப்பட்ட சமுதாயப் பங்கேற்பு வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டம் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் உதவியுடன் அமுலாக்கப்பட்டதோடு, நலன்பெறுநர்களை இனங்காணல், வீடுகளைத் திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் சமுதாய பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டன. வீடொன்றுக்காக ரூ. 125,000.00 தவணை நிதிக்கொடை நலன்பெறுநர் ஒருவருக்காக வழங்கப்பட்டது.
நிர்மாணிப்புக்காக சமுதாய உழைப்புப் பங்களிப்பு பூரணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

### 2. குடிசைகளற்ற நகரங்கள் நிகழ்ச்சித் திட்டம்.

நகர்சார் மற்றும் பகுதியளவில் நகர்சார் வலயங்களில் குடிசைகளிலும் சேரிகளிலும் வசிக்கின்ற சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு குடிசைகளற்ற நகரங்கள் நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டதோடு, குடிசை மற்றும் சேரிவாசிகளுக்கு தரமான வீடொன்றின் உரிமையைப் பெற்றுக் கொடுப்பது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக அமைந்தது.
இந்நிகழ்ச்சித் திட்டம் உள்ளூராட்சி நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் சமுதாயப் பங்கேற்பின் பேரில் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும்.
இங்கு அமைக்கப்பட்ட வரிசை வீடொன்றுக்காக ரூ. 175,000.00 வழங்கியதுடன் வீடற்றவர்களுக்கு ரூ. 125000.00 கொடையும் தவணையடிப்படையில் நலன்பெறுநருக்கு கிடைத்ததோடு நிர்மாணிப்புக்காக சமுதாய உழைப்புப் பங்களிப்பு பெறப்பட்டது.

### 3. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம்.

நகர்சார் வலயங்களில் அமைந்துள்ள வசதிகள் குறைந்த நகர்சார் குடியிருப்புக்களில் அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வசதிகள் குறைந்த நகர்சார் குடியிருப்புக்களில் சமுதாயப் பங்கேற்புடன் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இடம்பெற்றது.





## 7:1 நகர்சார் வறியோருக்கான வீடுகள் "அருணோதய குசும்" வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

**2009 ஆம் ஆண்டில் முன்னேற்றம்**

| | மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை | 2009 ஆம் ஆண்டில் நலன்பெறுநர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மேல் | கொழும்பு | 12 | 546 |
| | | கம்பஹா | 05 | 104 |
| | | களுத்துறை | 08 | 57 |
| 2 | மத்திய | மாத்தளை | 03 | 10 |
| 3 | தென் | அம்பாந்தோட்டை | 07 | 83 |
| | | காலி | 05 | 20 |
| | | மாத்தறை | 04 | 67 |
| 4 | வடமேல் | குருநாகல் | 01 | 40 |
| | | புத்தளம் | 01 | 1 |
| 5 | ஊவா | மொணறாகல | 01 | 9 |
| | | பதுளை | 01 | 3 |
| 6 | சபரகமுவ | இரத்தினபுரி | 01 | 1 |
| | | கேகாலை | 03 | 13 |
| 7 | வடமத்திய | அநுராதபுரம் | 01 | 32 |
| | | பொலநறுவை | 01 | 1 |
| 8 | கீழ் | அம்பாறை | 04 | 13 |
| கூட்டுத்தொகை | | | | 1000 |

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டில் செலவிட்ட தொகை ரூ. 101.131 மில்லியன்களாகும்.



## 7:2 குடிசைகளற்ற நகரங்கள் நிகழ்ச்சித் திட்டம்

**2009 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

| மாவட்டம் | நகரம் | 2009 இல் நிர்மாணிப்புகள் |
|---|---|---|
| கொழும்பு | மொறட்டுவ | 186 |
| | தந்தெனியவத்த | 40 |
| | ஜவன்வத்த<br>- எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக | 30 |
| | சமரக்கோன்வத்த | 38 |
| | பிட்டனியவத்த | 27 |
| | இதல்வத்த8விசிரி | 43 |
| கம்பஹா | நீர்கொழும்பு | 86 |
| | தலாதூவ | 86 |
| இரத்தினபுரி | இரத்தினபுரி | 61 |
| | விசிரி<br>(இரத்தினபுரி மாநகர சபை ஆளுகைப் பிரதேசம்) | 61 |
| மாத்தளை | மாத்தளை | 52 |
| | விசிரி<br>(மாத்தளை மாநகர சபை ஆளுகைப் பிரதேசம்) | 52 |
| நுவரெலியா | நுவரெலியா | 27 |
| | பம்பறகெலே (தொடங்கப்பட்டது) | 27 |
| | பதுளைபதுளை | 76 |
| | விசிரி (தொடங்கப்பட்டது) | 22 |
| | பதுளுபிட்டிய (தொடங்கப்பட்டது) | 39 |
| | கயிலகொட (தொடங்கப்பட்டது) | 15 |
| அநுராதபுரம் | அநுராதபுரம் | 35 |
| | மல்வத்துஓயா | 35 |
| அம்பாந்தோட்டை | தங்காலை | 80 |
| | விசிரி | 80 |
| | அம்பாந்தோட்டை | 50 |
| | கோவில்வத்த | 50 |
| | கூட்டுத்தொகை | 653 |

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டில் செலவிட்ட பணத்தொகை ரூ. 19.729 மில்லியன்களாகும்.



## 7:3 “உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம்.

**2009 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

| தொடர் இல. | மாகாணம் | மாவட்டம் | உள்;ராட்சி ஆளுகைப் பிரதேசம் | பணி |
|---|---|---|---|---|
| 1 | மேல் | கொழும்பு | கொழும்பு மாநகர சபை | கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் பொரெல்ல வலயத்தில் குடியிருப்பு ஒன்றுக்கு மின்சார இணைப்பு வழங்குதல். |
| | | | சீதாவக்கபுர நகர சபை | அவிஸ்ஸாவளை - சீத்தாவக்கபுர ஆளுகைப் பிரதேசத்தில் இரண்டு குடியிருப்புகளுக்காக நீர் இணைப்பினை வழங்குதல், நச்சுத்தடை தொட்டியையும் கழிவுநீர்க் குழாய்த் தொகுதியையும் அமைத்தல். |
| 2 | | கம்பஹா | நீர்கொழும்பு மாநகர சபை | நீர்கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் குடியிருப்பொன்றுக்கான நச்சுத்தடை தொட்டியையும் கழிவுநீர்க் குழாய்த் தொகுதியையும் அமைத்தல். |
| 3 | மத்திய | நுவரெலியா | நுவரெலியா மாநகர சபை | வீடமைப்புக் கருத் திட்டங்களை சார்ந்ததாக பக்க மதில்களை நிர்மாணித்தல் |

இக்கருத் திட்டங்களுக்காக 2009 ஆம் ஆண்டில் செலவிட்ட மொத்தப் பணம் ரூ. 13.7 மில்லியன்களாகும்.



## 08. அதிகாரசபையின் நிதியம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 16 வது பிரிவின் பிரகாரம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதற்கென நிதியமொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு, சட்டத்தின் (3) வது பிரிவின்படி அதிகாரசபையின் தொடக்க மூலதனம் ரூ. 5000 மில்லியன் ஆகும்.

2009 டிசெம்பர் 31 ஆந் தேதியாகும் வேளையிலும் தொடக்க மூலதனத்தின் ஒரு பகுதி கூட அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லையென்பதோடு, சட்டத்தின் 16(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவு குறைந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியளிக்கும் பொருட்டு ஆதனங்களை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்ட மற்றும் அவ்வாறு சேகரித்து நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பணத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திப் பணிகள், நிர்வாகச் செலவுகள் மற்றும் சம்பளம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து 2009 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அனுப்பி வைக்கப்பட்ட பணத்தொகை ரூ. 148.5 மில்லியன்களாகும்.



# 09. நிதி அறிக்கை

9:1

### நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
### 2009/12/31 ம் திகதியில்
### ஐந்தொகை

| | குறிப்பு | 2009ம் ஆண்டிற்கான |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நிலையான சொத்துக்கள்** | | |
| மரத்தளபாடமும் பொருத்தியும் | 1 | 408,073.43 |
| அலுவலக உபகரணம் | 2 | 473,013.17 |
| **பிற நிறுவனங்களிலிருந்து கிடைத்த சொத்துக்கள்** | | |
| மரத்தளபாடமும் பொருத்தியும் | | 264,838.00 |
| அலுவலக உபகரணம் | | 115,749.00 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| நிர்மாணங்களுக்கான முற்பணம் | 3 | 500,000.00 |
| ஊழியர்களுக்கான முற்பணம் | 4 | 10,000.00 |
| காசு மற்றும் வங்கி மீதி | 5 | 674,060.36 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 2,445,733.96 |
| **உரிமையாண்மை, பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கம்** | | |
| உரிமையாண்மை மூலதனம் | | **500,000,000.00** |
| USIP வேலைத் திட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட சொத்துக்கள் | 6 | 3,388,468.92 |
| **ஒதுக்கம்** | | |
| மிகை/குறை வருமானம்/செலவுகள் | 9 | (5,192,654.63) |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| திரண்ட செலவுகள் | 10 | 3,437,919.67 |
| பணிக்கொடை ஒதுக்கம் | 11 | 812,000.00 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 2,445,733.96 |

இறுதி நிதிக்கூற்றினைத் தயாரிப்பது மற்றும் சமர்ப்பிப்பது நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைப்பணியாளர்களின் பொறுப்பாகும்.

| பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் நாயகம் | தலைவர் |
|---|---|---|
| ந.கு.அ.அ | ந.கு.அ.அ | ந.கு.அ.அ |



9:2

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை
2009 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான
வருமானச்செல்வு கணக்கு

| | | |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| வருமானம் (ந.கு.அ.அ.நிதியம்) | 148,545,294.29 | 148,545,294.29 |
| **செலவுகள்** | | |
| அபிவிருத்திச் செலவுகள் | 134,596,347.08 | |
| பிற அபிவிருத்திச் செலவுகள் | 277,117.35 | 134,873,464.43 |
| | | 13,671,829.86 |
| **நிருவாக பொதுப்பணிச செலவுகள்** | | |
| சம்பளம் | 7,315,622.86 | |
| வேதனம் | 47,675.00 | |
| மேலதிக நேரக கொடுப்பனவு | 228,211.40 | |
| பிற கொடுப்பனவுகள் | 57,430.00 | |
| பிரயாணச்செலவுகள் | 240,712.75 | |
| ஊ.சே.நிதியம் | 938,417.11 | |
| ஊ.ந.நிதியம் | 133,366.41 | |
| நலன்புரி நடவடிக்கை | 32,905.12 | |
| எழுது கருவிகள் | 422,303.60 | |
| எரிபொருள் | 297,745.50 | |
| செய்திப் பத்திரிகை | 9,560.00 | |
| முத்திரை | 36,645.00 | |
| தொலைபேசி செலவுகள் | 279,011.11 | |
| அலுவலக வாடகைச் செலவு | 1,482,789.80 | |
| அச்சு | 621,914.79 | |
| விளம்பரம் | 1,044,874.00 | |
| போக்குவரத்து | 2,679,663.51 | |
| மின்சாரம் | 60,841.56 | 15,929,689.52 |
| | | (2,257,859.66) |
| **பிற நெறிப்படுத்தல் செலவுகள்** | | |
| விழாச் செலவுகள் | 1,000,808.50 | |
| பிற செலவுகள் | 175,899.38 | |
| உபசரிப்புச செலவுகள் | 25,778.50 | |
| பயிற்சிகளுக்கான செலவுகள் | 401,091.24 | |
| நுகர்வுப் பொருட்களின் கொள்வனவு | 21,388.00 | |
| கண்காட்சி செலவுகள் | 101,850.00 | 1,726,815.62 |
| | | (3,984,675.28) |
| **பிற செலவுகள்** | | |
| திருத்தங்களும் பராமரிப்புச்செலவும் அலுவலகம் | 98,368.91 | |
| சுத்திகரிப்புச் செலவுகள் | 77,338.76 | 175,707.67 |
| | | (4,160,382.95) |
| **ஒதுக்கங்கள்** | | |
| மரத்தளபாடமும் பொருத்திகளுக்குமான தேய்மான ஒதுக்கங்கள் | 102,018.35 | |
| அலுவலக உபகரணங்களுக்கான தேய்மான ஒதுக்கங்கள் | 118,253.33 | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 812,000.00 | 1,032,271.68 |
| | | (5,192,654.63) |
| குறை வருமானம்/செலவு | | (5,192,654.63) |

வரவு செலவுக் கணக்கு



**நிதிச்சட்டம் 14(2)C பிரிவிற்கமைய**

**கணக்காய்வுத் தலைமையதிபதி அறிக்கை**



විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனதுஇல / My No: ரீஎச்/பீ/யூஎஸ்டீஏ/எப்ஏ/01/2009
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 2011 மார்ச் 14

தலைவர்
நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை

**நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர வதிவிட அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாகச் சமாப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றது.


නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151

சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451

INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
විද්‍යුත් තැපැල / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk



1.3 **கணக்காய்வின் நோக்கெல்லை**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைமைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத் தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளையும் மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டு மொத்தமான வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்காக அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியுள்ளதென்றும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.



## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர்ந்தபட்ச தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையானது 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 அதிகாரசபையின் கூட்டமைப்பும் நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2008 இன் 36 ஆம் இலக்க நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் மூலம் 2008 திசெம்பர் 03 ஆம் திகதி நகர மக்கள் வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் "பிவிதுரு மக்கள் நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரில் செயற்திட்டம் ஒன்று நிலவியதுடன் 2006 ஆகஸ்ட் 23 ஆம் திகதி 1459/20 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரமாணங்களின் பிரகாரம் 500 சதுர மீட்டர் நிலப் பரப்பிற்கு மேலாக நிலங்களில் அபிவிருத்தித் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது கட்டிடத்தின் சான்றுறுதி செய்யப்பட்ட கிரய மதிப்பீட்டுத் தொகையில் இருந்து அறவிடப்பட்ட 1% - 5% அளவிலான சேவைக் கட்டணத்தைப் பயன்படுத்தி நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் கீழ் நகர மக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என இரு தரப்பு



புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர மக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இடையே 2007 ஒக்டோபர் 01 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2007 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி முதல் நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த இந் நிகழ்ச்சித்திட்டம் நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிப்புடன் அந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிலவிய ரூபா 3,388,469 தொகையான தேறிய சொத்துக்களுடன் புதிய அதிகாரசபை நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருந்தன.

### 2.1.2 அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம்

2008 இன் 36 ஆம் இலக்க நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3) இன் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியன் ஆக வேண்டியிருந்ததுடன் இது பகுதியளவில் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டும். இருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் இறுதி வரை கூட அவ்வாறு மூலதனம் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவகத்தின் தொடர்ந்தியக்கம்

நிதிக்கூற்றின் குறிப்பு 03 இன் பிரகாரம் அதிகாரசபையின் தொடர் இயங்கும் நிலைப்பாடு தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் பின்வரும் விடயங்கள் காரணமாக நிதி உதவி இன்மையால் அதிகாரசபையின் தொடர் இயக்க நிலைப்பாடு நிலையில்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(உ) உப பிரிவின் பிரகாரம் குறைந்த செலவின வீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வழங்கலுக்காக ஆதன அபிவிருத்தியாளர்களிடம் இருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்ட சகல பணமும் அதிகாரசபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 மார்ச் மாதத்தின் பின்னர் அதிகாரசபைக்கு அவ்வாறு பணம்



பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச் சேவைக் கட்டண அறவீடு இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் இதன் காரணத்தினால் நிறுவகத்தின் பிரதான வருமான மார்க்கம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறை வீதம் 1:0.27 ஆனமையால் நடைமுறைப் பொறுப்பை ஈடு செய்வதற்கு போதிய நடைமுறைச் சொத்துக்களின் அளவு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் அதிகாரசபையின் செயற்பாட்டு மூலதனம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 3,065,859 தொகையான எதிர்மறை மீதி காணப்பட்டது.

(இ) நிறுவகத்தின் முதலாம் ஆண்டிலேயே ரூபா 5,192,655 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதற்குச் சமமான தொகையால் தேறிய சொத்துக்கள் எதிர்மறை மீதியைக் கொண்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காரியாலய வாடகை முறையே ரூபா 45,501 வும் ரூபா 84,174 வும் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மாவட்டக் காரியாலயம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான கொட்டாவ நகர மத்தியில் அமைந்திருந்த வீடொன்றைப் பெற்று அக் கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்காக வெளி நிறுவகம் ஒன்றிற்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 தொகையான முற்பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. இப் பழுதுபார்த்தல்கள் பூர்த்தியாக்கப்பட்டு 2010 மார்ச் 23 ஆம் திகதி ரூபா 4,797,082 தொகையான ஓர் பட்டியல் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதி



கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2009 நிதிக்கூற்றுக்களில் அப் பொறுப்புகள் தொடர்பாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பகுதியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதன மாற்றம் தொடர்பான கூற்று மற்றும் நிலையான சொத்துக்களின் மாற்றம் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதிசார் மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாடுகளிலான விளைவுகளில் ரூபா 5,192,655 தொகையான வருமானத்திற்கு மேலான செலவின மிகை காணப்பட்டது.

**3.2 செயற்பாட்டு மீளாய்வு**

**3.2.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 135 மில்லியன் தொகை நகர வறியோர் வீடமைப்புக்கான அருனோதய நிகழ்ச்சித்திட்டத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் வீடுகளின் பழுதுபார்த்தலோ நிர்மாணிப்புகளின் பௌதீக முன்னேற்றமோ மீளாய்வாண்டின் போது பரீட்சிக்கப்பட்டிராததுடன் பின்தொடர் நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 யூலை 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் உதவிப் பணம் பெறுவதற்கு உரித்தற்ற நபர்களும் மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவிப் பணத்தைப் பெற்று அவ் உதவிப் பண நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் வீட்டு நிர்மாணிப்பிற்காக இடைத்தரகராக செயற்படும் அமைப்பு நன்கொடைப் பெறுனர்களிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 3,135,794 தொகை தவணை அடிப்படையில் அதிகாரசபையினால் விடுவிக்கப்பட்டு அன்பளிப்புப் பெறுனர்களிற்கு



வழங்கப்படாது அவ் அமைப்புகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.2 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்குகள்
(ஆ) அபிவிருத்தி செலவின முகாமைத்துவம்
(இ) மனிதவள முகாமைத்துவம்
(ஈ) வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக நன்கொடை வழங்குனர்களை இனங்காணல்

ஒப்பம்: எச்.ஏ.எஸ் ஸமரவீர
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*